NOOLAHAM FOUNDATION

# நூலகம் ஆய்விதழ்

## ஆய்வுக்கட்டுரைகளுக்கான கையேடு - 2013

| இல. | விடயம் |
|---|---|
| 1. | **ஆய்வுக்கட்டுரைகளுக்கான விதிமுறைகள்** |
| 1.1 | "நூலகம்" ஆய்விதழுக்காக அனுப்பப்படும் கட்டுரை இதற்கு முன்பு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வேறு எங்கும் வெளியிடப்படவில்லை என்றும் இக்கட்டுரை கட்டுரையாளரின் சொந்த ஆக்கம் என்றும் எழுத்து மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ கட்டுரையாளர் உறுதிப்படுத்தல் வேண்டும். |
| 1.2 | கட்டுரையில் **தமிழ் எழுத்துகள்**, தமிழ் ஒருங்குறி எழுத்துருவில் [**Tamil Unicode Font**] தட்டச்சிடப்பட்டு இருக்க வேண்டும். |
| 1.3 | எழுத்துரு அளவு [Font size] 10 ஆக இருத்தல் வேண்டும். |
| 1.4 | மொத்தக் கட்டுரையும் **A4** அளவு தாளின் 10 பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். |
| 1.5 | தட்டச்சிடப்பட்ட கட்டுரை "**.odt**", "**.doc**" அல்லது "**.docx**" கோப்பு வடிவத்தில் இருத்தல் வேண்டும் |
| 1.6 | தட்டச்சிடப்பட்ட கட்டுரை மின்னஞ்சலில் இணைக்கப்பட்டு கட்டுரையாளரின் முழுப்பெயர், தொலைபேசி இலக்கம், அஞ்சல்முகவரி, தொழில் ஆகிய தகவல்களுடன் நிர்வாக ஆசிரியருக்கு **noolahamjournal@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக அனுப்பப்பட வேண்டும். |
| 1.7 | "நூலகம்" ஆய்விதழில் பிரசுரிப்பதற்காக ஆசிரியர் குழுவால் வெளியிடுவதற்காக ஏற்கப்பட்ட கட்டுரையின் முழுக் காப்புரிமையும் நூலக நிறுவனத்துக்கு உரியது. நூலகம் ஆய்விதழானது Creative Commons Attribution-ShareAlike 3.0 Unported (CC-BY-SA 3.0) உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். அவ்வகையில் கட்டுரையாசிரியரோ வேறெவரோ கட்டுரையினைப் பயன்படுத்துவதாயின் அதே உரிமத்துடனேயே பயன்படுத்த வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **http://creativecommons.org/licenses/by-sa/3.0/** இனைப் பார்வையிடுங்கள். வேறு உரிமங்களுடன் வெளியிட வேண்டுமாயின் நூலக நிறுவனத்திடம் எழுத்து மூலமான முன் அனுமதி பெற |

| | |
|---|---|
| | வேண்டும். வெளியிடுவதற்காக ஏற்கப்பட்ட கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டுவதற்கு இந்தக் கட்டுப்பாடுகள் இல்லை. |
| 1.8 | கட்டுரையின் தேர்வு மற்றும் வெளியீடு ஆகியவற்றில் ஆசிரியர்குழுவின் முடிவே இறுதியானது. |
| | |
| **2.** | **நூலகம் ஆய்விதழின் விடயப்பரப்புகள்** |
| 2.1 | **இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களிடையே** ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியதாகக் கருதப்படும் பின்வரும் விடயப்பரப்புகள் : |
| 2.1.1 | Religions and Cultural Memory - மதங்களும் பண்பாட்டு நினைவுகளும் |
| 2.1.2 | Architecture and Design - கட்டடக்கலையும் வடிவமைப்பும் |
| 2.1.3 | Science and Technology - அறிவியலும் தொழிநுட்பமும் |
| 2.1.4 | Law and Society - சட்டமும் சமூகமும் |
| 2.1.5 | Home and Life style - வீடும் வாழ்க்கைப் பாணியும் |
| 2.1.6 | Arts and Activities - கலைகளும் செயற்பாடுகளும் |
| 2.1.7 | Ethno Medicine - இனத்திற்குரிய மருத்துவம் |
| 2.1.8 | Social Structure, Genealogy and Kinship - சமூகக்கட்டமைப்பு, உறவுசார் பதிவுகள் மற்றும் உறவு நிலைகள் |
| 2.1.9 | Archaeology and History - தொல்லியலும் வரலாறும் |
| 2.1.10 | Linguistics and Literature - மொழியியல் மற்றும் இலக்கியம் |
| 2.1.11 | Ethnography and Race Relations - இனவரைபு மற்றும் இன உறவுமுறைகள் |
| 2.1.12 | Villages and Communities - கிராமங்களும் சமூகக்குழுக்களும் |
| 2.1.13 | Organizations and Institutions - அமைப்புகளும் கல்வி நிறுவகங்களும் |
| 2.1.14 | Landscape, Environment and Biodiversity - நிலவடிவம், சூழல் மற்றும் உயிர்ப்பல்வகைமை |
| 2.2 | **ஆவணப்படுத்தல் சார் தொழினுட்பங்கள் , தகவல் அறிவியல், அறிவுப்பகிர்வு, நூலகவியல்** சார்ந்த விடயப்பரப்புகள் |
| | |
| **3.** | **நூலகம் ஆய்விதழில் ஆய்வுக்கட்டுரைகளை ஏற்கும் படிமுறையும் அதுசார்ந்த தகவல்களும்** |
| | வெளியீட்டுக்காக நிர்வாக ஆசிரியரை வந்தடையும் அடையும் கட்டுரை, பின்வரும் படிமுறைகளினூடாக செலுத்தப்படும்: |
| 3.1 | ஆய்வுக்கட்டுரை முதன்மை ஆசிரியருக்கு அனுப்பப்படும். |
| 3.2 | ஆய்வுக்கட்டுரை அடையாளநீக்கம் செய்யப்பட்டு மூன்று பரிசீலனையாளர்களுக்கு அனுப்பப்படும். |

| | |
|---|---|
| 3.3 | ஒவ்வொரு கட்டுரையும் கட்டுரையாளரின் தனிப்பட்ட தகவல்கள் அகற்றப்பட்டு மூன்று பரிசீலனையாளர்களிடம் தரப்பட்டு, அவர்களிடம் இருந்து பின்வரும் முடிவுகள் பெறப்படும் : |
| 3.3.1 | *திருத்தமின்றி ஏற்றல்* |
| 3.3.2 | *திருத்தங்களை செய்ய வலியுறுத்தல்* |
| 3.3.2.1 | பரிசீலனையாளர் திருத்தங்களை அறிவிப்பின் அவை கட்டுரையாளருக்கு அறிவிக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்ட வடிவம் பெறப்படும். குறித்த பரிசீலனையாளருக்கு மீண்டும் அனுப்பப்பட்டு அவருடைய ஒப்புதலின் பேரில் கட்டுரை ஏற்கப்படும். |
| 3.3.3 | *நிராகரித்தல்* |
| 3.3.3.1 | ஒவ்வொரு கட்டுரைக்கும் நியமிக்கப்படும் மூன்று பரிசீலனையாளர்களில் பெரும்பாலானோர் கட்டுரையை நிராகரிப்பின், அதன் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் முதன்மை ஆசிரியருக்கு உண்டு. முதன்மை ஆசிரியர் விரும்பினால் அக்கட்டுரைக்கு வேறு பரிசீலனையாளர்களை நியமித்து பரிசீலனைச் செயற்பாட்டை மீள ஆரம்பிக்கலாம். |
| 3.4 | ஏற்கப்பட்ட கட்டுரை ஆய்விதழில் வெளியிடப்படும். குறித்த ஆய்விதழில் வெளியிட இடம் இல்லை எனில், காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்படும் |
| 3.5 | வெளியிடல், ஏற்கப்பட்டு காத்திருப்புப் பட்டியலில் வைத்தல், திருத்தம் செய்யக் கோரல், நிராகரித்தல் போன்ற செயற்பாடுகள் கட்டுரையாளருக்கு அறிவிக்கப்படும். |
| **4.** | **மொழி ஊடகம்** |
| | ஆய்வுக்கட்டுரை தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் அமைந்திருக்கலாம் எனினும், தமிழ் மொழியில் அமைந்திருத்தல் பெரிதும் விரும்பத்தக்கது. தேவைப்படுமிடத்து இரு மொழிகளும் பயன்படுத்தப்படலாம். |
| | |